2021 செப்டம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஈ) தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியையும், சமத்துவத்தையும் உறுதி செய்திட பட்டியலின மற்றும் பழங்குடியின மக்களுக்கு அரசமைப்புச் சட்டம் அளித்துள்ள மிக முக்கியமான அமைப்பான பட்டியலின, பழங்குடியின மாநில ஆணையத்தினை அமைக்க திராவிட முன்னேற்றக் கழக அரசு முடிவு செய்திருக்கிறது. பட்டியலின மக்களுக்கு இடஒதுக்கீட்டினை உயர்த்தி, பழங்குடியின மக்களுக்குத் தனியாக ஒரு விழுக்காடு அளித்து, அருந்ததியின மக்களுக்கு 3 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கி, அவர்களுடைய கல்வி, சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுவரும் அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு. அனைத்து சமூக மக்களும் ஒன்றிணைந்து வாழ சமத்துவபுரம் கண்டதும் திராவிட முன்னேற்றக் கழக அரசு. அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக இப்பொழுது பட்டியலின,*

பழங்குடியின மக்களுடைய உரிமைகளைப் பாதுகாத்திட தமிழ்நாடு பட்டியலின, பழங்குடியினர் மாநில ஆணையம் அமைக்கும் சட்ட மசோதாவினை இப்பேரவையின்முன் நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக்